Jan - 2013

No. of Printed Pages : 7

**3451**

பதிவு எண் | | | | | | | |

8059629

# தமிழ் - முதல் தாள்
# Language — Part A — TAMIL — Paper I
## (செய்யுள், உரைநடை)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினாஎண் **49** க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

### பிரிவு - I
(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : **6x1=6**

**1.** இளங்கோவடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

(அ) சோழநாடு (ஆ) சேரநாடு (இ) பாண்டியநாடு

**2.** 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் பாடல் ________ 'அச்சமில்லை அச்சமில்லை' எனப் பாட தூண்டியது.

(அ) பாரதிதாசனை (ஆ) சுரதாவை (இ) பாரதியாரை

3. 'நல்' என்னும் அடைமொழி பெற்ற நூல் ________.

(அ) அகநானூறு (ஆ) கலித்தொகை (இ) நற்றிணை

[ திருப்புக

4. தமிழர் மனித வாழ்வை ________ , ________ எனப் பிரித்தனர்.
(அ) மேடு, பள்ளம் (ஆ) அகம்,புறம் (இ) உயர்வு, தாழ்வு

5. தமிழர்கள் நிலத்தை ________ வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
(அ) மூன்று (ஆ) ஆறு (இ) ஐந்து

6. 'விரல்கள் பத்தும் மூலதனம்' என்னும் பாடலின் ஆசிரியர் ________ .
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) தாராபாரதி

பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக : **6x1=6**

7. சேக்கிழார் பெருமான் அருளியது ________.

8. தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் ________ போன்றிருந்தேனே.

9. குடும்பவிளக்கு ________ படைப்புகளுள் ஒன்று.

10. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ________.

11. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ________ இருக்கும்.

12. இலெமூரியாவை ________ என்பர்.

பகுதி-3

பொருத்துக : **4x1=4**

| | | |
|---|---|---|
| 13. சீறாப்புராணம் | - | துன்பம் |
| 14. பூத்தது மானுடம் | - | நிலவு |
| 15. இடர் | - | சாலை இளந்திரையன் |
| 16. இந்து | - | உமறுப்புலவர் |

பகுதி-4

விடைக்கேற்ற வினா அமைக்க : 4x1=4

17. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.

18. மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.

19. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.

20. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் வடலூர்.

பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5x2=10

21. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது ?

22. ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர் ?

23. குகனின் வேண்டுகோள் யாது ?

24. தேவாரம் - பொருள் எழுதுக.

25. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.

26. 'நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என் கொல்' - யார் யாரிடம் கூறியது ?

27. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடு தூது கூறுவன யாவை ?

[ திருப்புக

பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க 5x2=10

28. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது ?

29. அரசன் சாலமனுக்கு தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட பொருள்கள் யாவை ?

30. பணிவாய்ப்புக்கு உரிய கல்வித் தகுதிகள் எவை ?

31. மொழி மாற்றம் என்றால் என்ன ?

32. ஞாலம் - பெயர்க்காரணம் கூறுக.

33. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார் ?

34. வள்ளலாரின் முழக்கம் யாது ?

பிரிவு – III

(மதிப்பெண்கள் : 24)

பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3x4=12

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழ மன்னர்களின் சிறப்புகள் யாவை ?

36. கம்பராமாயணம் - சிறு குறிப்பு எழுதுக.

37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

38. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

39. உடல் உறுப்புகளின் பயன்களாக இளந்திரையன் கூறுவன யாவை ?

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3x4=12

40. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது ?

42. பகட்டான வாழ்க்கையைப் பாவம் என்று காந்தியடிகள் கருதியது ஏன் ?

43. உழவுத் தொழில் குறித்து எழுதுக.

44. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்

(i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(ii) முத்தமிழ் -விரித்தெழுதுக.

(iii) விளம்பக்கேள் - பொருள் கூறுக.

(iv) உன்னோடுவந்துரைக்கும் - பிரித்தெழுதுக.

(v) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

[ திருப்புக

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

அறத்தின் அடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு; அறத்தின் வழியே பொருளைக் கண்டது; அவ்வறத்தின் வழியே இன்பத்தினை எட்டியது. அக்காலத்தே அறம், பொருள், இன்பவாழ்வைத் தமிழர் பெற்றிருந்தனர்.

பழந்தமிழர் அன்பு வழியினர். அன்பைப் போற்றியது போலவே வீரத்தையும் போற்றினர். வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்டிர் மணந்துகொள்ள விழையார். பெண்பாற் புலவர்கள் பெண்களின் பெருவீரத்தினைப் பாடியிருக்கிறார்கள். சான்றாக மறக்குடியில் பிறந்த மாண்புடைய பெண்ணொருத்தி தன் தந்தை, கணவன் ஆகியோரை இழந்த பிறகு, பால்மணம் மாறாச் சிறுவனை செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே, அவள் துணிவு! புறப்பாடல்கள் இதனை விளக்குகின்றன.

(i) அன்பு வழியினைப் பின்பற்றியவர் யார் ?

(ii) பழந்தமிழர் வாழ்வு எதனை அடிப்படையாகக் கொண்டது ?

(iii) புறப்பாடல் - பிரித்து எழுதுக.

(iv) செருக்களம் - பொருள் தருக.

(v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 2x8=16

47. (அ) "தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை ?

அல்லது

(ஆ) பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

48. (அ) தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி குறித்து விரிவாக எழுதுக.

அல்லது

(ஆ) கருத்துப்படம் பற்றியும், கல்விப்படம் பற்றியும் விளக்கி எழுதுக.

## பகுதி - 2

**49.** செய்யுள் வடிவில் விடை தருக : **2+2+6=10**

(அ) 'அறனீனும்' - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'தரும்' - என முடியும் குறள்.

(இ) 'உலகியலின்' - எனத் தொடங்கும் தமிழ் வளர்ச்சிப் பாடல்.

-o0o-